(ஆ) மேட்டூர் ஸ்பின்னிங் மில்லில் சில தொழிலாளர்கள் நீக்கமும் அதனுல் நடைபெறும் வேலைநிறுத்தமும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மேட்டூர் ஸ்பின்னிங் மில்லில் நீண்ட நாட்களாகப் பணியாற்றி வந்த 7 தொழிலாளர்களை நியாயமான காரணமில்லாமல் வேலைநீக்கம் செய்துவிட்ட காரணத்தால் 17—10—1975 லிருந்து மேற்படி தொழிற்சாலையில் வேலைநிறுத்தம் நடந்து வருகிறது. இதனுல் உற்பத்தி தடைப் பட்டும் தொழிலாளர் குடும்பங்கள் துன்பப்பட்டு இருந்து வரும் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து விவாதிக்க, பேரவையின் 42-வது விதியின்கீழ் ஒரு தீர்மானம் கொடுத்திருக்கிருர் திரு. எம். சுரேந்திரன் அவர்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மேட்டூரில் ஒரு ஸ்பின்னிங் மில் இருக்கிறது. அதில் 300 தொழிலாளர்களுக்கு மேல் வேலை செய்கிருர்கள். அங்கே நிரந்தரமாக வேலை செய்கிற தொழிலாளர்கள் வேறு வேலைகளுக்கு மாற்றப்பட்டு, அந்தத் தொழிலாளர்கள் வேறு வேலையில் மற்றவர்கள் செய்கிற அளவுக்கு வேலை செய்ய வேண்டுமென்று கட்டாயப்படுத்தப்பட்டு அதைச் செய்யாததால் இந்த ஏழு பேர்கள் பலர் தொழிற்சங்கத்தின் நிர்வாகத்தில் முக்கியமான பொறுப்புடைய வர்கள் இப்போது வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யப் பட்டுள்ளனர். எல்லா நேரங்களிலும்போல் இந்த நேரத்தில் செய்வது சரியானது அல்லவென்று அந்தத் தொழிற்சாலை நிர்வாகத்திற்கு எடுத்துக்காட்டினேன். அந்தத் தொழிலாளர்கள் நிரந்தரமான வேலையில் செய்யும் அளவுக்கு தற்காலிகமாக மாற்றப்பட்டிருக்கும் அந்த வேலையில் அளவு குறைவுபடுகிறது என்பது நிர்வாகத்தின் குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டு இன்றைக்கு அல்ல, ஆறு வருஷங்களாக இருக்கிறது. அப்படி ஆறு வருஷங்களாக இருந்து கொண்டிருக்கிற காரியத்தை இந்த நேரத்தில் பார்த்து அவர்களை டிஸ்மிஸ் செய்வதென்றுல் அவசர கால நிலைமையை அவர்கள் சிறிதும் பொருட்படுத்தவில்லை என்பதுதான் தொழிற்சாலை நிர்வாகத்தின் நிலை.

தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்யக்கூடாது, உற்பத்தி தடைபடக்கூடாது, அதே நேரத்தில் தொழிற்சாலை நிர்வாகம் தொழிலாளர்கள் மீது வேலைநீக்கம் நடவடிக்கை எடுக்கக் கூடாதென்ற பொதுவான கருத்து, தார்மீகமான நிலையில் நாட்டு நிலைமைக்கேற்ப உருவாக்க வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை தேச

முழுவதும் ஏற்பட்டிருக்கும்பொழுது, வேண்டுமென்றே அந்தத் தொழிலாளர்களை ஆத்திர மூட்டும் வகையில் தங்களுடைய தொழிற்சாலை நடக்காமல் இருந்தால் நல்லது என்று எண்ணுகிறார்கள் போல் தோன்றுகிறது.

அப்படிப்பட்ட காரணத்தால் இப்படி ஒரு செயலைச் செய்து தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு கிட்டத்தட்ட ஒரு மாதமாக வேலைநிறுத்தம் நடக்கிறது. இதுபற்றி லேபர் ஆபீசர், டெபுடி கமிஷனர், கமிஷனர் அவர்கள் எல்லாம் பேச்சு வார்த்தை நடத்தியும்கூட இந்தப் பிரச்னை தீரவில்லை என்ற தகவல் வந்திருக்கிறது. இதனால் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும் இது தொடர்ந்து நடைபெற அனுமதிக்காமல், இந்த அவசர நிலைமையில் தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்தது கண்டிக் கத்தக்கது என்று நிர்வாகத்திற்கு எடுத்துக் காட்டி அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ளும்படி செய்ய வேண்டும் என்ற முக்கியமான விஷயத்தைப்பற்றி ஆராய வேண்டியது அவசியம் என்று கருதுகிற காரணத்தால் மற்ற பிரச்னைகளையெல்லாம் ஒத்திவைத்து இதை விவாதிக்க இந்தச் சபையில் கொண்டுவந்திருக்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ், மேட்டூர் அணை என்னும் நிறுவனத்தில் சுமார் 470 தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் கீழ்க்கண்ட தொழிற்சங்கங்கள் இயங்கி வருகின்றன :—

1. மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், மேட்டூர் அணை.

2. மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம். மேட்டூர் அணை.

ரீலிங் பிரிவில் நிர்ணயிக்கப்பட்டுள்ள உற்பத்தி அளவை கொடுக்கவில்லை என்ற காரணத்தினால் நிர்வாகத்தினர் கீழ்க்கண்ட 7 தொழிலாளர்களை 15-9-1975 அன்று வேலை நீக்கம் செய்தனர் :—

1. திரு. ஏ. கிருஷ்ணன்.
2. திரு. வி. வெங்கடசாமி.
3. திரு. என். நடராஜன்.
4. திரு. எம். ராஜப்பன்.

1975 நவம்பர் 12] [திரு. க. இராசாராம்]

5. திரு. கே. பழனியப்பன்
6. திரு. ஏ. நாராயணசாமி.
7. திரு. என். தண்டபாணி.

இதை எதிர்த்து மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், 16-9-1975 அன்று 1-10-1975 முதல் வேலைநிறுத்தம் செய்யப் போவதாக வேலைநிறுத்த அறிவிப்புக் கொடுத்தது. இந்தத் தொழிற் தகராறு சேலம், தொழிலாளர் துறை அலுவலர் முன்பு பேச்சு வார்த்தையில் இருக்கும்போது 11-10-1975 அன்று மேட்டூர் ஸ்பின்னிங் மில்ஸ் தொழிலாளர் சங்கம், தங்களுடைய வேலை நிறுத்த அறிவிப்பை வாபஸ் பெற்றுக் கொண்டு வேலை நீக்கப் பிரச்னையை மட்டிலும் வற்புறுத்துவதாகவும் தெரிவித்தனர்.

16-10-1975 அன்று கோவை, தொழிலாளர் துறை துணை ஆணையர் முன்பு பேச்சு வார்த்தைகள் நடந்தன. அதன் முடிவு தெரிவதற்கு முன்பாக தொழிலாளர்கள் அனைவரும் 17-10-1975 காலை 7 மணி முதல் வேலைநிறுத்தம் செய்தனர்.

இதனிடையில் நிர்வாகத்தினர் தொழிற் தகராறு சட்டம் பிரிவு 33 (2) (பி)ன் கீழ் மேற்கண்ட 7 தொழிலாளர்களை வேலை நீக்கம் செய்ததை அங்கீகரிக்க சேலம் தொழிலாளர் துறை அலுவலருக்கு விண்ணப்பம் செய்தனர். இந்த விண்ணப்பத்தின் மீது சேலம் தொழிலாளர் துறை அலுவலர் விசாரணைக்குப் பிறகு அங்கீகாரம் கோரிய மனுவை 3-11-1975 அன்று தள்ளுபடி செய்துவிட்டார். இதனால் இனிமேல் வேலைநிறுத்தம் தேவை யில்லை என்றும் வேலைக்குத் திரும்புமாறும் தொழிற் சங்கங்களை சேலம் தொழிலாளர் துறை அலுவலர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தொழில் தகராறு மீது சென்னை தொழிலாளர் துறை தனித் துணை ஆணையர் முன்பு 27-10-1975, 28-10-1975 மற்றும் 3-11-1975 ஆகிய தேதிகளில் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிவு ஒன்றும் ஏற்படவில்லை. மீண்டும் பேச்சுவார்த்தைகள் மூலம் முடிவு காணலாமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத் திற்குப் பிறகு, இதுகுறித்து அவையின் இதர அலுவல்களை ஒத்திவைத்து விவாதிக்கத் தேவையில்லையென்பதால் இதற்கான அனுமதியை மறுக்கிறேன்.